Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும, வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுஎ] யாழ்ப்பாணம்:- மன்மத வஸு ஆவணி மீ நுகவ வெள்ளிக்கிழமை (16 SEPT. 1955) [இல-உடு]

## பஞ்சமா பாதகங்கள்

## பிறவிப் பயன் பெறுதற்குத் தவிர்த்தல் கடன்

இற்றைக்கு இரண்டாயிரத்தறுநூறு ஆண்டுகட்கு முன் சமய சம்பந்தமாய், உலகிற்கு கௌதம புத்த பெருமானால் போதிக்கப்பட்ட "பஞ்சசீலக் கொள்கைகளை" விட, இன்றைக்கு அரசியல் ஞானியாய் விளங்கும் நேரு அவர்களால் போதிக்கப்பட்டு வரும் "பஞ்சசீலக் கொள்கைகளையும்" விட, காலவரையறை இன்றி ஏற்பட்ட சைவசமயத்து முழுமுதற் கடவுளாயுள்ள "சிவபிரானால்" முற்றாகப் பாபச் செயலென்று தள்ளபட்டவை" "பஞ்சமா பாதகச் செயல்கள்". பஞ்சமாபாதகமென்றால் கொலை, களவு கள், காமம், பொய் என்பன வாய்வருவன. எம்பெருமான் தம்மை அடைய உருவெடுத்த மானிடர்கள் இப்பஞ்சமா பாதகங்களைச் செய்யாது ஒழித்து விடவேண்டுமென்று உபதேசித்த நோக்கங்கள் பல. எறும்பு முதல் மானிடர் வரையுள்ள ஆன்மாக்கள் கடவுளரின் பிள்ளைகள். அப்படிப்பட்ட பிள்ளைகள் ஒருவர்க்கொருவர் சகோதரர். எல்லாப் பிறவிகளிலும் விசேடமான பிறவி மானிடப் பிறவியே. 'எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவியே யாதினு மரிதரிது, இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, ஏது வருமோ" என்றார் தாயுமான சுவாமிகள். "ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயனின்றே, மெய்யுணர்வில்லாதவர்க்கு" என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவர். எல்லா உயிர்களும் ஓரறிவு, ஈரறிவு; மூவறிவு, நாலறிவு, ஐந்தறிவு படைத்தவைகள். மானிடரோ ஆறறிவு பெற்றவர்கள். ஆறறிவுபெற்றவர்கள் தான் பகுத்தறிவைக் கொண்டு, பகுத்தறிந்து செயல் ஆற்றுபவர்கள். மானிடராயுள்ள அவர்கள் தான் முத்தி இன்பத்தைப் பெறுபவர்கள். அவர்கள் தான் மக்கள். மானிட சென்மத்தைப் பெற்றும் பகுத்தறிந்து செயலாற்றாது மிருகச்செயல் செய்பவர்கள் தான் மாக்கள். மானிட யாக்கை எடுத்த போதிலும், மானிடர்கள் மக்கள் — மாக்கள் என்று இருபிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள். பஞ்சமாபாதகச் செயல்களைச் செய்யாதவர்கள் மக்கள். செய்பவர்கள் மாக்கள்.

பஞ்சமாபாதங்களுள் முதலாவதாக உள்ளது 'கொலை'. கொலையானது கடவுளால் படைக்கப்பட்ட உயிர்களைக் கொலை செய்வதாகும். பலத்திலும், புத்தியிலும் கூடினவர்கள் பலமற்ற, புத்தியற்ற பிராணிகளைக் கொலை செய்வதும், அவற்றின் ஊனை உண்பதும் கொலைப் பாவம் தருவனவாகும். மனிதனை மனிதன் கொலை செய்தால் அரசாங்கம் கொலை செய்த மனிதனின் உயிரையும் உடலினின்றும் பிரிக்கும். அறிவிற் குறைந்த பிராணிகளைக் கொலைசெய்தால் யார் கேட்பது. கடவுளே கேட்கவேண்டும். இதனால் தான் பொய்யாமொழியார் "கொல்லான் புலாலைமறுத்தானை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்" "அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று" என்று சொன்னார்.

திரு. நா. சேனாதிராசா
சுழிபுரம்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

அரசியல் வலை:

## தமிழர் தோழன் தகநாயகவின் தம்பக் கூத்து!

### போலிப்புள்ளிவிபரம் காட்டிவிட்டாற் பேச்சுப் பொருந்திவிடுமா?

காலித் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. W. தகநாயகவென்றாற் பரந்த மனப் பான்மை. சிறுபான்மையினர் சிநேகம். பொதுசனநலவிருப்பம் என்ற தன்மைகளின் உருவம் என்பதே ஒரு சாதாரண விளக்கம். ஆனால் இவரின் அரசியல் அநுபவங்களையும் செயல்களையும் ஆராய்ந்து பார்த்தால் அவ்வாறல்ல........! கீச்சுக் கீச்சு என்னும் பேச்சுப் பிரேமை பிடித்தவர்களில் ஒருவர் என்பது நன்கு புலப்படும்.

திரு. தகநாயக எந்த அரசியற் கட்சியில் இருக்கிறார் என்பது இப்பொழுது யாராலும் திட்டமாகச் சொல்லப்பட முடியாத மர்மம். ஆனால் சமசமாசக் கட்சிக் கூட்டத்திலே தோன்றுவார். பொதுவுடைமை ஊர்வலத்திலே உடன் செல்வார். இந்தியர் மாநாட்டிற் கலந்து கொள்வார். யாழ்ப்பாணத்தில் மாபெருங்கூட்டங்களிலே ஐ. தே. கட்சியை கிறிக் கிழித்துச் சிறிச் சினந்து வீராவேசத்துடன் பேசித் தமிழகத்தின் சிறிய தந்தையென்றவகையில் நடித்துவிடுவார்.

இந்தக் காலி அங்கத்தவர் சென்ற சனிக்கிழமை கொழும்பு மாநகர மண்டபத்திற் புத்த குருமார்கள் பொதுவுடைமைத் தோழர்கள் விடுதலைக்கட்சி வீரர்கள் ஒருங்குசேர்ந்து மொழி பற்றி நடத்தின 'சாம்பார்'க் கூட்டத்திலே பட்டந் தீர்ந்த வகுப்புவாதப் பழிகாரனாக முன்பு தாம் கொண்ட கொள்கைகளையும் மக்கள் அவர் மீது வைத்திருந்த மதிப்பையும் காற்றுவாய் வீசி விட்டுச் சிங்களமே வேண்டும் எனக் கங்கணம் கட்டி நின்றாராம்! அவ்வளவில் நின்றாரா? இலங்கையிலே சிங்களம் பேசும் மக்கள் வீதம் நூற்றுக்கெண்பதென்று வாய் தடக்காது நெஞ்சம் பதறாது சொன்னாராமே! புள்ளிவிபரம் காட்டிப் பேசு

தொடர்ச்சி 2ம் பக்கம்

## மந்திரங்களுக்கு மூலமாயுள்ளது ஐந்தெழுத்து

### ஓதும் பேறில்லார் பிறவிப் பேறடையார்

நமசிவய என்னும் ஐந்தெழுத்துக்களால் ஆக்கப்பட்ட காரணத்தால் இவை ஐந்தெழுத்து என்றும் பஞ்சாட்சரம் என்றும் வழங்கப்படுகின்றன.

பஞ்ச+அட்சரம் என்பது ஐந்தெழுத்தாகும். அட்சரம் என்பதின் சொற்பொருள் விகாரப்படாமல் அழிவின்றி நிற்பது என்பது. ஒவ்வொரு சைவப் பிள்ளையும் ஏழு வயதிலாவது அதற்கு அண்மையிலாவது சமய தீட்சை பெற்றுப் பிறந்ததினாலாகிய பெரும் பயனைத் தரவல்ல பஞ்சாட்சரத்தைச் செபிக்கின்ற பெரும் பாக்கியத்தைப் பெற வேண்டும். சமயதீட்சை பெறாதவர்களும் ஐந்தெழுத்தை ஓதாதவர்களும பிறந்தும் பிறவாதவர்களாவர். ஐந்தெழுத்துமே எல்லா மந்திரங்களுக்கும் மூல மந்திரமாக விளங்குவது. இப்பஞ்சாட்சரம் மூவகைப்படும். அவையாவன தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், காரணபஞ்சாட்சரம். நகரத்தை முதலாகக்கொண்டு உச்சரிக்கும் மந்திரத்தை (நமசிவய) தூலபஞ்சாட்சரமென்றும் சிகரத்தை முதலாகக் கொண்டு உச்சரிக்கும் மந்திரத்தை (சிவயநம) சூக்கும பஞ்சாட்சரம் என்றும், சைவசித்தாந்தப் பேரறிஞர்கள் கூறுவர். சிகராதி பஞ்சாட்சரத்தில் (சிவயநம) முதலெழுத்து (சி) சிவத்தையும் இரண்டாம் எழுத்து (வ) அருட்சக்தியையும், மூன்றும எழுத்து (ய) ஆன்மாவையும், நான்காம் எழுத்து (ந) திரோதான சக்தியையும், ஐந்தாம் எழுத்து (ம) மலத்தையும் குறிக்கின்றன.

"ஈசன் அருள் ஆவி
எழிலார் திரோதமலம்
ஆசில் எழுத்தஞ் சின்
அடைவாம்"


என்றும் உண்மை விளக்கமென்னும் சித்தாந்த நூல் ஐந்தெழுத்தின் பெருமையை விளக்குகின்றது.

"ஊன நடனமொரு
பாலொரு பாலாம்
ஞானநடந் தானடு
[illegible]"

என்னும் திருவருட்பயன் நூலில் கூறப்படும செய்யுளையும் நோக்குக. ஐந்தெழுத்தில் ஆன்மா நடுவிலுள்ளது. ஒரு பக்கம் திரோதான சத்தியும் ஒருபக்கம் அருட்சக்தியும் உள்ளன. ஆன்மா திரோதான சக்தியைச் சேர்ந்தால் மலத்துடன் சேரும். மலம் அறியாமையைக் கொடுத்து உலக விஷயங்களில் மயக்கத்தையும் இச்சையையும் கொடுத்துப் பிறவிகளில் ஆன்மாவை அழுத்தும். ஆன்மா அருட் சக்தியுடன் சேர்ந்தால் சிவத்துடன் சேர்த்துவிடும். இதனால் முத்தியின்பம் உண்டாகும். நகராதி பஞ்சாட்சரம் உபாயமார்க்கர்குரியது. பிறவிப் பிணியிலே விடுவனவாகிய திரோதானத்தையும் மலத்தையும் முதலாக வைத்து ஐந்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

ஆசிரியர்
திரு. செ. சின்னத்துரை B. A.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். மன்மத ஹூ ஆவணி மீ கக உ வெள்ளிக்கிழமை

## எங்கள் வீட்டில் எங்கள் மொழிக்கு உத்தரவாம்!

உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசித் திரிந்த தேசத்தொண்டர்களின் உண்மையான உருவம் இப்பொழுது நன்கு வெளியாகிவிட்டது. 'சர்வமும் சமம்' எல்லாம்பொது' 'கோனுமசரி குடியும் சரி' 'சாதி மத பேதம் சற்றேனும் இருக்கப்படாது' என்றெல்லாம் அரசியல் ஞானம் பேசி மக்கள் மத்தியிலே மகா ஞானிகள் போல நடித்து வந்தவர்கள் தங்களைக் காட்டிவிடாது மறைத்து வைத்திருக்க முடியாத நிலைமையை மொழிப் பிணக்கு - உண்டாக்கிவிட்டது. எனவே, திரு. W. தகநாயகவும் போட்ட வேடத்தைக் களைந்துவிட்டு இயற்கையாய்த் தோற்றிக் கொழும்புக் கூட்டத்திலே குடியாட்சிக்கொரு புது விளக்கம் கொடுத்திருக்கின்றார். இதுவரையும் மக்கள் ஆட்சியென்றால் ஆட்பலத்திலே தங்கியிருக்கக் கூடாது என்று பொருளபடப் பேசிய இவர் இப்பொழுது எந்த மொழி பெருந்தொகையினரால் பேசப்படுகின்றதோ அந்த மொழியே அரசவரிசை பெறுதல் வேண்டுமென்று வகுப்புவாதச் சித்தாந்தத்தை விரித்துரைத் திருக்கின்றார்

இலங்கை இந்திய ஒப்பந்தம் தெல்கிமா நகரிலே எழுதப்பெற்ற பொழுது இடத்துக்குரிய மொழி என்ற ஒரு சொற்றொடரை முதலமைச்சர் தலைமையிற் சென்ற குழுவினர் ஆங்குப் புகுத்தியதை இங்கு நினைவுக் கழைகின்றோம். அப்பொழுதே இந்த இடத்துக்குரிய மொழி எண்ணத்தை உருவாக்கி அரசியற் கொள்கையாய் நிலைக்கச் செய்வதற்கு அமைச்சர்கள் அடிகோலி விட்டார்களென்று நாம் கண்டனஞ் செய்தோம். அந்தக் கொள்கையை இப்பொழுது ஆட்சி ஆதிக்கக் கட்சிக்கெதிராக அல்லும் பகலும் அயராதுழைத்துவருபவர்களே ஆதரிப்பதென்றால் குரங்குகளெல்லாம் ஒரு முகம் என்பது மீண்டும் உண்மையாகின்றது.

# ஸ்ரீ குமாரசுவாமிப்பிள்ளை அவர்களுக்கு பாராட்டும் பொற்கிழியும்

சைவசீலர் ஸ்ரீ த. குமாரசாமிப்பிள்ளை அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவுத் தொடர்பில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கைத்தொழில் வீடமைப்பு சமூகசேவா அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் பாராட்டு விழா ஒன்று வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் வழிபாடாற்றி ஊர்வலம் நிகழ்ந்த பின் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சைவப் பெருமக்கள் பலர் சமூகமளித்து விழாவிற் பங்குபற்றினர்.

தலைவர் அவர்கள் பேசும்போது சான்றோரைப் போற்றும் தமிழ்ப் பண்பாட்டிற்கமைய இவ் விழா நடைபெறுகிற தென்று குறிப்பிட்டு, பிள்ளை அவர்கள் செய்துவரும் தமிழ்ச் சைவத் தொண்டின் சிறப்புக்களை எடுத்துக்காட்டி அன்பு ததும்பப்பாராட்டிப் பொன்னுடை சாத்தினர்.

வைத்திய கலாநிதி சி. குருசாமி அவர்கள் பிள்ளை அவர்களுக்குப் பொற்கிழியை வழங்கினர். அப்பொற்கிழியும், பொன்னுடையும் தேவாரத் திருமுறைக்கு ஆற்றும் வழிபாட்டில் நாம் சாத்திய பொன்னுடையும் சொர்ண புஷ்பமுமாகும் என்று கூறி, பிள்ளையவர்கள் சைவத்துக்குச் செய் செய்யும் சேவையின் சிறப்பை அவர் உணர்ச்சிமீதூரப் பாராட்டினர்,

ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா, திரு. எஸ். அம்பிகைபாகன், வித்துவான் க. கி. நடராசன், பண்டிதர் க. நமசிவாயம் ஆகியோர் பாராட்டுரைகள் பலவாறு பகர்ந்தனர்.

உயர்தரக்கல்வி தேசிய மொழிகளில் எவ்வாறு பயிற்றப்படுதல் வேண்டும் என்பதை ஆராய்ந்து வழிவகைகள் வகுப்பதற்கு ஆணையிடப்பெற்ற குழுவினர்களிற் பெரும்பான்மையோரும் இநதப் பெரும்பான்மைக் கொள்கையை ஆதரித்துத் தமிழ் மக்கள் தங்கள் இல்லங்களிலே தங்கள் மொழியை நன்கு பயன்படுத்தலாம் என்று பரந்த மனப்பான்மை கொண்டு அரியதொருவரம் தந்திருக்கும் வேளையிலே இடதுசாரிக் கட்சித் தலைவர்களும் எக்கட்சியிலும் இடம்பெறாத திரு தகநாயவும் அதே வகையில் அன்பு ததும்பத் தமிழருக்கு வழிகாட்ட வந்திருப்பது நன்று நன்று. இவர்கள் கூற்றெவ்வாறாக இருந்த போதிலும் எடுத்துக்கொண்ட எண்ணத்துக்காதரவாகக் காட்டிய புள்ளி விபரங்களையும் நியாயங்களையும் நாம் ஆராயாது விடுதல் கூடாது.

இலங்கையிலே சிங்களம் பேசும் மக்கள் தொகை நூற்றுக்கு எணபதென்று திரு தகநாயக எங்கிருந்தறிந்தார் என்று நாம் கேட்கின்றோம். வீராவேசங்கொண்டு வகுப்புவாத வேதனையாற்றுக் குண்டு பேச்சு நிகழ்த்தும்பொழுது உண்மைபுலப்படாமையால எண்ணத்தில் எழுந்தவற்றையெல்லாம இவர் வெளிப்படுத்தினூரா அன்றி வரலாறு விபர[illegible] மாற்றி அமைக்க [illegible] டினூரா யாம் அறிவேம்.

## பிரிந்து கூடும் பேறு

ஸ்ரீ ஜி ஜீ. பொன்னம்பலத்தைத் தலைவராகக் கொண்ட தமிழர் மகாநாடு இருகூறாய்ப் பிரிந்து தமிழரசுக் கட்சி தமிழர் மகாநாடு என்னும் பெயர்களுடன் இயங்கியது, இரு சாராரும் அளவுக் கடங்கா அவதூறுகளைப் பெருக்கினர். மொழிப் பிணக்கின் துணையால் இருசாராரும் இப்பொழுது ஒன்றுகூடுகின்றனரென்று செய்திகள் வெளிவருகின்றன. இதன் பயனாய் திருவாளர்கள் சி. வன்னியசிங்கம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், வ. அமிர்தலிங்கம், என். ஆர். இராசரோதயம் ஆகியோருடன் ஸ்ரீ பொன்னம்பலம் தலைவராக ஐக்கிய முன்னணி அபேட்சகர்கள் என்னும் பெயருடன் பாராளுமன்றத் தேர்தலுக்குமுன் வருவார்களாம்.

முன்னிதழ்த் தொடர்ச்சி

## மகாகவி காளிதாசரின்
# குமார சம்பவம்

தமிழாக்கம்
பரமேஸ்வரக்கழகம் — ச. இராமச்சந்திரன்

மூன்றைநாள் வேள்வி தன்னில் முக்கணன் தனக்கோர் பாகம்
தந்திடா தவமதித்த தக்கனூர் மகவாய்ச் சாரும்
இந்தமா பழிதீர்த் துய்ய எண்ணியே இமய மன்னன்
தந்தருள் மகவாய் வந்தாள் சம்புவின் சக்தி தானே. (21)

ஊனுற மூளத்தோ ராகி ஓங்குநன் னீதி யாள்வோர்க்
காணுற செலவமெல்லாம் அணைதரு மாறே போல
வானுடைத் தவத்தினுளவ் வரைக்குல மன்னன் தேவி
தரவரு செல்வி யாகிச் சார்ந்தனள் தாணி அன்னை. (22)

மலர் மழை பொழிய வீசும் வாயுவும் துகளி னீங்க
அலர்தரு திசைக ளெல்லா மகிழொளி அடைய அன்றே
பலர் புகழ் பணிலமார்ப்பப் பல்லுயிர் தமக்கு மின்பம்
நிலவுநா ளாயிற் றந்த நேரிழை உதித்த நன்னுள். (23)

சூலுற மேகந் தன்னைத் தொடுதலால் தோற்றி அங்கு
வாலுறு கதிரை வீசு மணிவளர் வரையே மான
மேலுற மொளியி னாலே மேனையும் விளங்க லூற்றுன்
காலுறு கவினர் சோதிக் கடவுண்மா மகவைப் பெற்றே. (24)

அறைதரு புகழி னங்கே அவதரித் தருளும் செல்வி
பிறையென வளர்ந்தா ளந்தப் பிறையது வளர்ந்த பின்னை
நிறைவுறு மழகேயான நிலவுகால் வதனை நோ
உறைதரு கவினுற் செய்யும் உருவது தனையு மொத்தாள். (25)

(தொடரும்)

# மகாவலிகங்கை மொழிப் பிரேரணைகள்

யாழ்ப்பாண நகரசபையின் சென்ற கூட்டத்திலே வரி விகிதம் வானொலி நிலையம் என்பவற்றுடன் மகாவலிகங்கையை வடபகுதிக்குத் திருப்ப வேண்டுமென்றும் தமிழ்மொழிக்குச் சிங்களத்துடன் சமவுரிமை கொடுக்கவேண்டுமென்றும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

வரி, வானொலி பற்றிய பிரேரணைகள் முறையே திருவாளர்கள் எஸ். சி. மகாதேவா, முதலியார் சி. முத்துத்தம்பி ஆகியோராலும் திருவாளர்கள் ஜே. எஸ். நிகொலஸ், எம். எஸ். எப். சேவியர் ஆகியோராலும் பிரேரித்து அநுவதிக்கப்பட்டன.

மகாவலிகங்கையை வடபகுதிக்குத் திருப்பவேண்டுமென்றும், தமிழ்மொழிக்குச் சமவுரிமை கொடுக்க வேண்டும்என்றும்கேட்கும பிரேரணைகளை முறையே திருவாளர்கள்: எம். கார்த்திகேசன், ஜே. எஸ். நிககலஸ் ஆகியோரும முதலியார் சி. முத்துத்தம்பி, திரு. எஸ். சி. மகாதேவா ஆகியோரும் பிரேரித்து அநுவதித்தனர்.

## அரசாங்க உபகாரச் சம்பளம்

அரசாங்க சேவையிலுள்ளோர் சேவையிலிருந்து உபகாரச் சம்பளத்துடன் நீங்குதற்கு 55 வயதுவரையும் சேவை செய்யவேண்டுமென்னும்விதியை விடுத்து பத்து வருட சேவையின் பின் உபகாரச் சம்பள உரிமையுடன் நீங்கக்கூடிய திட்டமொன்றை அரசாங்க அதிகாரிகள் ஆராய்கின்றனராம்.

## அரசியல் அலை

—0—

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

வதில் ஒரு புலி என்று பாராளுமன்றத்திற் பேர் பெற்ற இவர் அடுத்துவரும் தேர்தலிலே சிங்களத் தொகுதியிலே வெற்றி பெறுவதற்கு வேறு வழியில்லை என்று இப்பொழுது இந்த வேடம் போட்டிருக்கின்றார். இவர் எந்த வேடத்தையும் போட்டாலும் மக்கள் கவலைப்படமாட்டார்கள். ஆனல் உண்மையை மூடிக்கட்டிவிட்டுப் போலிப் புள்ளி விபரத்தைச் சொல்லி ஒரு மொழிக் கொள்கையை நிருபிக்கத் துணிந்த இவர் துணிபைக் கண்டு பொதுசனம் திடுக்கிட்டுவிட்டதே!

### விடுதலைக் கட்சியின் விபரீதம்

திரு. பண்டாரநாயகாவின் விடுதலைக் கட்சியின் அரசமொழிக் கொள்கை எது என்றகேள்விக்கு அக்கட்சி அங்கத்தவர்கள் இருவர்ஒருமொழிக் கட்சிக்கூட்டத்தில் நிகழ்த்திய பேச்சுகள் மறுமொழி பகர்ந்துவிட்டன. எத்தனை நாட்களுக்கு இரண்டு பக்கத்துக்கும் தலையை அசைத்துக்கொள்வது? தேர்தல் அண்மித்துவிடத் தலை ஒரு பக்க நிலையை யடைவது நூதனமன்று.

### சமசமாசக் கட்சியின் சம நோக்கு

சமம்! எல்லாம் சமம். இது எங்கள் சமயக் கொள்கை என்று வாயைப் பிளந்து வானளாவக் கோடை பிடிமுழக்கஞ் செய்துவந்த சமசமாசக் கட்சியினரின் சம நிலைக்கும் இந்த அரச மொழிகள் பற்றிய விவாதம் பங்கம் விளைவித்துவிட்டது. திரு. பிலிப்புக் குணவர்த்தன யாழ்ப்பாணத்தில வந்தால் அவரைப் புடைசூழ்ந்து வரவேற்றுத் தமிழர் தோழனக ஊர்வலத்தில் ஆரவாரத்தோடு அழைத்துத்திரிந்த இடதுசாரிகள் ஏமாந்த சோணகிரிகளாய்விட்டனர். சமம் என்றது அரசியற்றந்திரமன்றி உண்மையல்ல என்பதை யாழ்ப்பாண மக்கள் முன்னரே அறிவர். ஆகவே சமசமாசக் கட்சியின் வேடம் வெளியாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாட்டு முறை

## சைவமக்கள் சிந்தித்துச் செய்ய வேண்டியவை

[ தென்மயிலை, திரு. செ. கோவிந்தசாமி ]

பரம கருணாநிதியாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடம் ஆலயமாகும். ஆலயம் என்பது ஆன்மாக்கள் ஒடுங்குதல் என்பது பொருள். ஆகவே ஆன்மாக்கள் புலனடக்கம் பெற்று வாழ வேண்டுமானால் சாந்நித்தியராகிய பரமசிவனைத் தியானிக்க வேண்டும். அதற்கு ஆலயங்களே அவசியம் வேண்டப்படுகின்றன.

ஆன்மாக்களாகிய நாம் ஆலயத்திற்குச் செல்லும் பொழுது மகா பயபக்தியோடு செல்ல வேண்டும். ஆலய வீதியில் நாம் காலை வைத்துநடக்கும்பொழுதே புறப்பற்றுக்களை ஒழித்துவிடல் வேண்டும். அப்பால் கோபுரவாசலுக்கண்மையிற்சென்றுவிட்டால் மெய்மறந்து நின்று உருகிப் பாடவேண்டும். நெக்கு நெக்குருகவேண்டும். 'உள்ளந்தாணின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகவேண்டும். அமைதி நிலவவேண்டும். இத்தகைய தன்மைக் காயமைந்த தேவாலயங்களில் நாம நின்று வணங்கவும், பாடவும், ஆடவும், களிப்படையவும் எவ்வளவோ தவம் செய்யவேண்டும். "நானேயோ தவம் செய்தேன் சிவாயநமவெனப்பெற்றேன்" என மணிவாசகரும்கனிந்துகூறினர்.

தெய்வீக ஒளி நிலவும் தேவாலயங்களை நாம் பன்முறையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆலயம் என்றாலென்ன? இது எப்படி அமைக்கப் பெற்றிருக்கின்றது. மற்றச்சமயக்கோயில்களுக்கும் இதற்கும் உள்ள வித்தியாசம் என்ன? இதனை நாம் எப்படி வணங்கவேண்டும்? நாம் யார்? என் உள்ளம் யார் என்பதையும் நாம் ஒருபோதும் தெளிந்து சிந்திப்பதில்லை. இச் சிந்தனை சத்தி இல்லாததினால் இன்று திருவிழா நடக்கும் ஆலயங்களின் வீதிகள் எல்லாம் சந்தை நிலையங்களாக இருக்கின்றன. வியாபாரத் தலமாக இருக்கின்றன. ஒரே இரைச்சலாக இருக்கின்றது. சனங்கள் ஒருவரோடு ஒருவர் மோதுப்படுகிறார்கள். உலகியல் விகாரமான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. அர்ச்சகர்கள் பணவருவாயைப் பார்க்கிறார்கள். இதுமட்டா ஒலிபரப்பிகள் ஒருபால முழங்குகின்றன — மேளவாத்தியச் சத்தம் இன்னொருபால் முழங்குகின்றது. தாசிநடனம் மற்றொருபால் நடைபெறுகின்றது. வாண விளையாட்டு வேறோர்பால் நடைபெறுகின்றது. இவையெல்லாம் சிவானுபூதியைப் பெறும் தலங்களில் நடைபெறக்கூடியன வா என்பதை மக்கள் உணர்வதில்லை

சர்வ லோக நாயகராகிய பரமசிவம் சாந்நித்தியராய் இருந்து எழுந்தருளும் விக்கிரகத்துக்கு செயற்கை முறையில் கால் கை கட்டுகிறார்கள் — கடுதாசி மாலைகளைச்சூட்டுகிறார்கள், கால்களுக்கு சீலைக் கந்தை சுற்றுகிறார்கள். திருமுகங்களுக்கு போலி முடி வைக்கிறார்கள். ஓங்காரப் பொருளை விளக்கும திருவாசியில மின்சாரம் தொடுக்கிறார்கள். இந்தச் சிவத்துரோகச் செய்கை எல்லாம் எரிவாய் நரகத்திற்கு செல்லும் வழியாகும். இச் செய்கைகளையெல்லாம் நன்குணர்ந்த சைவப்பெரியார் ஸ்ரீமத் சிவபாதசுந்தரனார் அவர்கள் தம்மனதில் சிந்தித்துச் சிந்தித்துக் கண்ணீர் விட்டுச் சொல்லிஅழுவார்கள். ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானும் இதுபற்றிக் கண்டித்து வற்புறுத்தி போய் இருக்கிறார்கள். இதனை இனிமேலாவது சைவ மக்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

சைவக் கோயில்களிலெல்லாம் அமைதி நிலவ வேண்டும். அமைதி இல்லாத இடத்தில் ஆனைத் தொழமுடியாது. அமைதி உள்ள சிவதலத்திற்குத்தான் பெருமையுண்டு. அமைதி, பணிவு, சாந்தம் இல்லாத தலங்களெல்லாம் தலங்களாகமாட்டா. அங்கு அரனும் நாணி மறைந்திற்பர். அருள்செய்ய முற்படமாட்டார். இக் காலம விபரீதமான காலம் என்பது பலருக்குத்தெரியும அதனால் பலவிதமான கொள்கைகளும் புதிது புதிதாகத்தோற்றும். "புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்பார்" புதிதாக எது வருகிறதோ அதில் புதுமைப் பித்து எவர்க்குமுண்டாகின்றது. அதுவும் சின்னாட்களால் பழமையோடு சேர்ந்து பழமைப்பித்தாகும். ஆலயங்களில் எல்லாரும் பூசை செய்யலாம். எல்லாப் பாஷையிலும அர்ச்சனை செய்யலாம். எல்லாரும் பரமசிவனார் ஆகம நெறி கடந்து வணங்கலாம் என்ற பித்தும் உண்டாகின்றது.

தற்போது இலங்கையில் சைவ சமயம் வரவரப் பல வழிகளாலும் தாக்கப்படப் போகிறதாகச் சைவப்பெருமக்கள் நினைத்து வருந்துகின்றனர். அதனை நாம் சிந்திக்கும்பொழுது ஒவ்வொரு மதத்தவரும் தத்தம் மதத்தைப் பரப்புவதற்குரிய ஆயத்தம் செய்யுநேரல் நாமும் எம் மதத்தைப் பரப்ப வேண்டிய முயற்சிகள் எடுக்க வேண்டும். இதற்குச் சைவப்பள்ளிக்கூடங்களும் சைவக் கோயில்களும் சிறந்த முறையில் நடைபெறவேண்டும். இதற்குச் சைவாசிரியர்கள் ஊக்கமெடுப்பார்களானால் வேண்டிய எல்லாம் செய்து நிறைவேற்றலாம். சைவர்களாகிய நாம் எல்லோரும் கூடியளவு சைவ சாதனைகளைக் கைக்கொண்டொழுகல் வேண்டும். அங்ஙனம்ஒழுகினற்ரன் சைவ வாழ்வில் பயனுண்டு. ஆதலால் சைவமக்கள் ஒவ்வொருவரும் தம் வழிபாடு முறைகளைச் சிந்தித்துத் திருத்தி இறைவனைவேண்டி அவன் திருவடி பெறுவார்களாக.

# அணிந்துரை அரங்கம்

பொதுவிஞ்ஞானம்

முதல் புத்தகம்
(முதல் பாரத்திற்குரியது)
இரண்டாம் புத்தகம்
(இரண்டாம் பாரத்திற்குரியது)
மூன்றாம் புத்தகம்
(மூன்றாம் பாரத்திற்குரியது)

ஆசிரியர்:
எம். எஸ். சுப்பிரமணியன்

திலகர் வித்தியாலயம்
உதவி ஆசிரியர்
கல்லிடைக் குறிச்சி
(இந்தியா)

விலை:

| | | |
|---|---|---|
| முதலாம் புத்தகம் | ரு | 1-0-0 |
| இரண்டாம் ,, | ,, | 1-0-0 |
| மூன்றாம் ,, | ,, | 1-6-0 |

பெறுமிடம்:
எம். எஸ். சுப்பிரமணியன்
ஸ்ரீ வராகபுரம் தெரு
கல்லிடைக் குறிச்சி
Kallidaikurichi (S.I.Ry)
South India

இது சென்னை வித்தியா பகுதியாரின் புதிய பாடத்திட்டத்திற்கமைய எழுதப் பெற்றது தாய் மொழியில் விஞ்ஞானக் கல்வி பயிற்றும் முயற்சியில் எழக்கூடியதாகிய தாய்மொழிப் புத்தகம் இல்லாக்குறையை நீக்க முன்வந்துள்ளது. ஆங்கிலச் சொற்கள் ஆளப் பெற்றுளவேயெனினும் அவை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாங்க வெளியீட்டில் வெளிபிடப்பட்டவை என்பது குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

உணவு, சுவாசித்தல், பிறத்தலும் வளர்தலும், அசைவுகள், ஆரோக்கிய வாழ்வு, வீடுகட்டல் சுற்றுப்புறம் ஆராய்தல், இயற்கைச் சக்திகளை உபயோகித்தல் என்பனவாக வரும் பொருள்கள், ஆறும, ஏழாம், எட்டாம் வகுப்புகளுக்குரியனவாகிய இப்புத்தகங்களில் தரத்துக்கேற்றவாறு விளக்கப்பெற்றுள்ளன. சென்னைப் பாடப் புத்தகச் சபையாரால் இது அங்கீகரிக்கப்பெற்றுள்ளது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

# கற்புச் சிறப்பு

## ஆண் பெண் இருபாலார்க்கும் பொது

## ஒரு பாலாகப் பெண்கட்குக் கோடல் நடுநிலைமையன்று

செல்வி ந. மாலோகமணி
காவெட்டி கிழக்கு

கற்பு என்பது ஒழுக்கம். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்றார் தெய்வப் புலவர் இது இருபாலார்க்கும் அத்தியாவசியம் வேண்டப்படும் பண்புகளுள் தலையாயது. ஆண் பெண் ஆகிய இருபாலாராரும் உலக வாழ்க்கை நடத்தப்படும்பொழுது ஒரு பாலராகிய பெண்கட்கு மாத்திரம் கற்பைக் காக்கும் தேவையைக் கூடக் கொடுத்து ஆண்பாலார்க்குத் தவிர்த்தல் மக்களின் பண்புசேர் அறிவுச் செயலன்று. ஒரு வண்டியில் இரண்டு காளைகளைப் பூட்டிவிட்டால் ஓர் காளையில எதுவாயினும் குறைவுண்டானல் வண்டி செல்வதில் தடங்கலுண்டாகும். அதுபோல் வாழ்க்கையெனும் வண்டியைத் தடங்கலின்றி இழுத்தற்கு ஆடவர், பெண்டிர் ஆகிய இருபாலாரும ஒத்திழுக்க வேண்டும். ஓர் பாலாரில் குறைவு உண்டாயின் வாழ்க்கையெனும் வண்டியை [illegible] இயலாது. ஆண் பெண் ஆகிய இருபாலாரும் அவரவர்கட்கு ஆன்றோரால் விதிக்கப்பட்ட விதிமுறைகளில் ஏற்றத்தாழ்வுகளைக் கையாண்டாலும் கற்பு நிலையில் இருபாலார்க்கும் ஒரே விதி அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைக்கப்படாவிடின் வாழ்க்கை வளம் பெறாது. சமுகம் முன்னேறாது. கற்பு விஷயத்தைப் போல வேறெந்த விஷயமும் மனத்தை அதிகம் பாதிக்க மாட்டாது. இன்றைய உலகில் சமூகத்தில காணப்படும் பெரும்பாலான கொலைகட்கும் கலகங்கட்டும் மூல காரணங்களை ஆராய்ந்து பார்க்கப்புகின் ஆடவர், பெண்டிர் ஆகியோரின் கற்பு நிலைத் தவறுதலென்றே எணக்கிடக்கின்றது. சமுதாயத்தில் இவ்விழி நிலை குறைந்தாலன்றி, சமுதாயம் முன்னேறவும் கலகங்களின்றி அமைதியுடன் வாழவும் இயலாது.

அப்படியிருக்கவும் சமுதாயத்திலிருக்கும் நீதியினமான கொள்கைகளில் ஒன்றளன்னவெனில் ஆடவர்கள் எப்படியும் தங்கள் கற்பைக் கைவிடலாம், பகிரங்கமாகவே பன்முறையும் அதைக் காற்றிற் பறக்க விடலாம் என்ற ஒரு நிலைமையாகும். பெண்கள் மாத்திரம் தங்கள் கற்பைக் கண்ணியமாகக் காக்க வேண்டுமாம். இல்லையேல் சமூகத்தில வசைமாரி திரண்டு எழுந்துவிடும். இன்றைய சமுதாயத்தில் ஒரு வாலிபன் பகிரங்கமாகத் தன் கற்பு நிலையில் தவறியவனயிருப்பினும் அவனுக்குப் பெண்கொடுக்கப் படாதபாடெல்லாம் படுகின்றனர் பலர். ஆனல் ஒரு பெண் நம்பிக்கை மோசதாலோ அல்லது சந்தர்ப்பச் சூழ்ச்சியாலோ தனது நிலையின் சிறிது தவறின

தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவப்பிரசங்கம்

### காரைநகரில்

காரைநகர் கருங்காலி ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயத்தில் மணவாளக்கோல தின உற்சவமாகிய 31.8.55 புதன்கிழமை இரவு சைவப் பிரசாரகர் ஸ்ரீமான் வே. கந்தையா அவர்கள் “ஆலயங்களின் இக்காலநிலை” என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு பிரசங்கம் செய்த பொழுது பண்டைக்காலத்தில் எம் சமய குரவர் ஆதியோர் ஆலயங்களில் பாவச்செயல்களை நீக்கிப் புண்ணியச் செயல்களைப் புரிந்து பரமபொருளின் பெருங்கருணையைப் பெறுவதற்காகப் போற்றி வந்தார்களென்றும், தற்காலத்தில் அதற்கு நேர் விரோதமாக, ஆபாசச் செயல்களைப் புரிந்து கொள்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். அத்தருணம் ஆலயகர்த்தா அவர்கள் பேசும்போது சென்ற பல வருடங்களாக ஆபாசச் செயல்கள் பலவற்றையும் நீக்கிப் பெருமானின் பெருங் கருணையைப் பெறுவதற்கேற்ற முறையில் இவ்வாலயம் சீர்திருத்தப் பெற்றிருக்கிறதென்றும், தற்பொழுது ஆலய வழிபாடு செய்பவர்களும் இவ்வித நல்ல கொள்கைகளை ஆதரித்து வருகிறார்களென்றும் கூறினார்.

●

### செல்வச்சந்நிதியில்

நிகழும் ஆவணிமீ 14, 15, 16ந் தேதி செவ்வாய், புதன் வியாழன் நாட்களில் தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் சைவப்பிரசாரகர். திரு. பொன் அப் அப்புக்குட்டி அவர்கள் ஆயிரக்கணக்கான அடியார்களுக்குமன்பர்களுக்கும் ஒலிபரப்பிமூலம், திருவாளர் கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் “சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன்” என்னும் சொற்றொடரையுடைய கந்தர் அலங்காரச் செய்யுளைப் பீடிகையாகக் கொண்டு “கடவுள்வழிபாடு” என்னும் பொருள்பற்றியும் சிறந்த சைவப்பிரசங்கங்கள் செய்தார். அவர்பேசும்போது உடலுக்கு உணவு வேண்டப்படுவதுபோல ஆன்மாவுக்குக் கடவுள் வழிபாடு வேண்டப்படுமென்றும், புலாலுணவைநீக்கி, தீக்ஷை பெற்று விபூதி தரித்து உருத்திராக்கமணிந்து, திருவைந்தெழுத் தோதுவதே பொய்மை நீக்கி உண்மை சாதித்துத் தாய்மையடையும் வழியென்றும் கோயில் வழிபாடே சுலபமாகக் கடவுளிடத்தில் மெய்யன்பு செய்ய உதவிசெய்யுமென்றும் குறிப்பிட்டார்.

செவ்வாய்க்கிழமை, திரு. அப்புக்குட்டி அவர்கள் தலைமையில் திரு. வைத்திலிங்கம், திரு. கணபதிப்பிள்ளை ஆகியோர் “ஸ்ரீபஞ்சாட்சரம்” “நாம ஏன் பிறந்தோம்” என்னும் விடயங்கள்பற்றிப் பேசினார்கள்.

---

### பெருவெள்ளத்தின் பெருஞ்சேதம்

மகாநதியின் வெள்ளப் பெருக்கால் இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் பல கோடி மக்கள் பெரும் ஆபத்தான நிலைக்காளாயினர்களாம். பல பாகங்களிலிருந்து உதவிகள் கொடுபடுகின்றன.

### இந்து ஆலய அறநிலையச் சட்டம்

பாராளுமன்றப் பிரதிநிதிகளிடையேயுள்ள கருத்து வேறுபாடே இந்து ஆலய அறநிலையச் சட்டதிட்டம்சட்டமாதற்கு இடையூறாயிருக்கின்றதாம். ஆயினும் இத் திட்டம் இந்துப் பிரதிநிதிகள் உறுப்பினராகும் ஓர் உபசபையால் ஆராயப்பட்டு விரைந்து சட்டமாக்கப்படுமென்று கூறப்படுகின்றது.

### அமெரிக்க அநுதாபம் இல்லையாம்

கோவா மக்களின் சுதந்திரம் பற்றி இந்தியா எடுத்துக் கொண்ட நிலையில் அமெரிக்க அனுதாபமுண்டென்று இந்தியா கூறி வருகின்றதென்றும், அது பிழையானதென்றும்கூறி போர்த்துக்கேயரின் கொள்கைக்கே அமெரிக்க அநுதாபமுண்டென்று கூறுகின்றதாம் போர்த்துக்கேய வெளிநாட்டுக் காரியாலயம்.

### தமிழுக்கு இரண்டாம் இடம்

கொழும்பு நகரமண்டபத்தில் ஸ்ரீபதமெகம விமல வன்சதேரோ தலைமையில் நடந்த கூட்டத்தில் சிங்களமே அரசாங்க மொழியாக வேண்டும் என்று தீர்மானஞ் செய்திருக்கின்றார்கள். தமிழுக்கு சம உரிமை கொடுத்தால் நேர்வது குழப்பமேயாகுமாம். ஆகையால சிங்களம அரசாங்க மொழியாகதமிழ்தமிழ்ப்பகுதி மொழியாதல் வேண்டுமெனத தமிழ மொழிக்கு விதியும் வகுதது விட்டார்கள்.

### எச்சரிக்கை ஏற்கவேண்டியவர்களாயினர் தமிழ்ப் பிரதிநிதிகள்

அரசியல் திட்டத்தில் தமிழ்மொழிக்குச் சிங்களத்துடன் சமஉரிமை கொடுக்கும் திருத்தம் விரும்பியும் தமிழ் மக்களைப் பிற துறைகளில் அரசாங்கம் நடத்தும் முறைபற்றியும் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் முதலமந்திரிக்குத் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்களாம் அதன் பயன் என்னவென்றால் இத்தகைய நினைவுகளை நீக்கி அரசாங்கக்கட்சி விதிகளைத்தழுவி அவர்கள் நடக்கவேண்டுமென்றும் அல்லது அரசாங்கக் கட்சியை விட்டு நீங்க[illegible] மென்றும் எச்ச[illegible] பெற்றதேயாம்.

---

# பஞ்சமா பாதகங்கள்

1-ம் பக்கத்தொடர்ச்சி

“கொல்லா விரதம் ஒன்றே கொண்டோர் நல்லோர், மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே” என்றும் “கொல்லா விரதம் குவலயமெல்லாமோங்க, எல்லார்க்குஞ் சொல்வதென் இச்சை பராபரமே” என்றும் தாயுமான சுவாமிகள் சொல்லியிருக்கின்றார்கள். ஒருபிராணியையும் இம்சை செய்யாதிருப்பதுதான் தருமம். கொலைத்தொழில் ஆற்றினால் உலகமே இல்லை. ஆகையால்தான் கொலையை முதலாக வைத்து, கொலை செய்யப்படாது என்று ஆண்டவன் வற்புறுத்தியது.

இரண்டாவதாக உள்ளது களவு. களவு என்பது உண்மையான வழியில், நீதியாய் பாடுபட்டு ஒருவர் தேடி, அதனால் தாம், சீவனம் செய்ய வைத்திருக்கும் பொருளை, இன்னொருவர் களவாடுதல். “பிறர் பொருள் எட்டியே எனவும்” என்று பீமசேனன் மகாபாரதத்தில் சொல்லுகின்றான். யாருடைய பொருளையும் எட்டிக்காய்க்குச் சமானமாய் பாவிக்கவேண்டும். “நஞ்சு” போல் எண்ண வேண்டும். களவு செய்யக் கூடாது என்று எம்பெருமான வற்புறுத்துகின்றார்.

மூன்றாவதாக உள்ளது “கள்” எதையும் செய்யும் கொடிய அரக்கன் கள். இதை என்னென்று சொல்லுவது. மனிதனால் உணவென உண்டாக்கப்பட்ட உணவுகள், மனிதரை வளர்க்கக கண்டுபிடித்துஉண்டாக்கப்பெற்றன. ஆனால் கள்ளோ மனிதனுடைய அறிவைக் கெடுத்து, மனிதனை நடைப்பிணமாக்குகின்றது. திருவள்ளுவர் சொல்லுகின்றார் அஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர் என்று இப்படியான கொடிய கொடுமையைச் செய்யும் கொடிய இராக்கதனை அடியோடு இல்லாமல் செய்யவேண்டும்; நாலாவதாக உள்ளது “காமம்”. காமம் என்பது மக்களிடத்திலுள்ள ஓர் ஆசை, ஆண் பெண்ணிடத்திலும், பெண் ஆணிடத்திலும், கொண்டுள்ள ஆசை. சடசம்பந்தம். இந்த ஆசையை நீதியான வழியிற் கட்டுப்படுத்துவது ஒருவழி. நீதி இல்லா வழியில் நடப்பது இன்னொருவழி. இப்படியான விபசாரம் செய்பவர்களை உலகம் தூற்றுவதுடன், அரசாங்கமும் தண்டனை [illegible] பிள்ளை அவர்கள் சொன்னதுபோல “அன்றுகொண்டவன் கண்டால் வரும் பெருங் கொலையே, அந்த அற்ப சுகத்தால் வரும் ஆபத்து மலையே”. தீமை வளர்கின்றது. காமமே பரகதிக்குச் செல்லவிடாது தடைப்படுத்துங் கபாடம், காமமே அனை வரையும் பகை ஆக்கிக் கழுத்தரியும கத்திதானே” என்று அனுபவங் கண்ட ஞானிகள் சொல்லுகிறார்கள். ஐந்தாவதாக உள்ளது “பொய்” பொய் என்பது, உண்மைக்கு மாறாய் உள்ளது. சத்தியந் தவறினோர்க்குத் தரணியில் பெருமை இல்லை என்று அரிச்சந்திர பூபதி சொல்லுகின்றார். சத்தியம் என்பது உண்மை. பொய் சொல்லி, சத்தியத்தை அழித்தவர்கட்கு, தரணியில் பெருமை இல்லை. இப்படிப்பட்ட பொய்யால் எத்தனையோ சீவன்கட்கு ஆபத்து ஏற்படுகின்றது. மகாத்மாகாந்தி அவர்கள் பள்ளிக்கூட மாணவர்கட்கும், உலகிற்கும் போதித்த போதனை, பொய் சொல்லப்படாதென்பது. நீதிஸ்தலங்களில் பொய் சொல்லுபவர்களை, உடனே நீதி அரசர்கள் தண்டிக்கிறார்கள். பொய் சொல்லுகிறவர்களையும், பொய்ச்சத்தியம் செய்பவர்களையும் கடவுள் தண்டிக்கிறார். மேலே சொல்லப்பட்ட பஞ்சமா பாதகங்களான ஐந்துசெயல்களின் இறுதியான விளைவு எரி நரகம். இப்படிப்பட்ட பாபச்செயல்களை மானிட சென்மம் எடுத்தவர்கள் செய்யக்கூடாது. செய்தால் கடவுளை அடைய முடியாது. பஞ்சசிலங்களிலும் பார்க்க, பஞ்சமா பாதகம் தவிர்த்தல் கூடியது. ஆனதால் இறைவன் கட்டளைப்படி பஞ்சமா பாதகச்செயல்களை விலக்கி மானிட யாக்கை பெற்ற நாம் உய்வோமாக.

---

# கற்புச் சிறப்பு

3-ம் பக்கத்தொடர்ச்சி

லும் அப்பெண்ணை ஏற்க ஒருவாலிபன் அஞ்சுகிறான். அருவருக்கிறான். எள்ளி நகையாடுகிறான். நடுநிலையற்ற, இவ்விழி நிலைகள் சமூகத்தினின்றும் நீக்கப்படல்வேண்டும். நீக்கப்படாமல் நின்று நிலவுமேல் இன்றைய உலகிருக்கும் நிலையிலும் எதிர்கால உலகம் அதிகம் பாதிக்கப்படும்.

பெண்கட்குரிய குறைகளையும், இழிவுகளையும் போக்கிப் பெண்கள் சமுதாயத்தை முன்னேற்ற வேண்டுமாயின் பெண்களே முன்வந்து ஆவன செய்ய வேண்டும். “பாம்பின் கால் பாம்பறியும்” என்றது போல பெண்களின் ஏற்றத்தாழ்வுகளும் ஏனைய்யான்மைகளும் பெண்கட்கே நன்கு தெரியும். ஆதலால் கற்ற பெண்களே கருத்தொருமித்துக் கண்ணியமாய்த்தொண்டாற்றவேண்டும். சென்னைச் சுகாதாரமந்திரி ஸ்ரீமதி ராசகுமாரி அமிர்தகௌரி ‘கற்பு ஆண் பெண் இருபாலார்க்கும பொது” என்று ஓரிடத்தில் கூறினார். இக்கூற்றை ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் கருத்தில் வைத்திருக்க வேண்டும். மக்களுணர்ச்சிகளையும், சமுதாய இயல்புகளையும் கவிதை ரூபத்தில் பாரிற்களித்த அமரகவி பாரதியாரும்,

‘கற்புநிலையென்று கூறவந்தால் [இரு
கட்சிக்கும் அஃதைப்
பொதுவில வைப்போம்...”

என்று விளக்கமாகப் பகிரங்கமாகக் கூறியிருக்கும் சமுதாயத்தில் அக்கூற்றைக் கையாண்டு அதன்படி நடக்கிறார்களில்லையே. நடக்க எத்தனிக்கிறார்களில்லையே. இக்குறைகளை நிவிர்த்தி பண்ணி சமுதாயத்தை முன்னேற்றுதற்குப் பெண்கள் முன்வருவார்களாக.

இன்றைய மக்களின் கற்புநிலைத் தவறுதல்கட்கு சமுதாயத்தில் அதிவேகமாகப் பரவிவருவதும் நாஸ்திகக் கொள்கையே காரணமாகும். சமயப் பண்பாடும் தெய்வக் கொள்கையும் மக்களிடையே தலைகாட்டுமாயின் இழிநிலைகள் நிலவ இடமேற்படாது. சமயப் பண்பாடுகளை மக்களிடையே வளர்த்தற்குப் பெண்கள் ஆவன செய்தலவசியம். பெண்கள் தங்கள் உரிமைகட்காகவும், குறைபாடுகட்காகவும் ஆவன செய்து நிவிர்த்தி மார்க்கந் தேட முற்படுவார்களாக. இருபாலாரும் ஒருமித்து முன்னேறுதற்கு இஃதே வழி. சுபம்.

---

### தேசிய மொழிபற்றி பெரிய புத்தகுரு

ஒவ்வொரு நாட்டவருக்கும ஒவ்வொரு மொழி உண்டு. இலங்கை மக்களுக்கு சிங்களமேயாகும். ஆகையால் அஃதே இந்நாட்டின் தேசியமொழியாதல் வேண்டும் என்று மொறட்டுவ புத்த மண்டபத்தில் நடந்த புத்ததர்ம ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலையின் ஆண்டுப் பரிசளிப்பு விழாவில தலைமை வகித்துப் பேசும்போது ஸ்ரீ நாரத மகாதேரோ அவர்கள் கூறினாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரங்களுக்கு மூலமாயுள்ளது ஐந்தெழுத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெழுத்தை ஓதினுல் உலக இச்சையைக் கொடுக்கும். அதை இடைவிடாது ஓதினுல் உலக விஷயங்களில் சித்தி உண்டாகும். சிவத்தை முன்னுக வைத்து ஓதினுல் மாத்ரப சிவம் மலத்தை ஓட்டி முத்தியைக்கொடுக்கும்.

"சிவ முதலேயா மாற
சேருமேற் றீரும்.
பவமிது நீயோதும் படி"

என்பது உமாபதி சிவாசாரியார் வாக்கு. சிகாரவகாரம் என்னுமிரண்டும் முதலிலே வரும்படி உச்சரித்தல் கூடுமாயின பிறவிக்குக் காரணமாகிய மலங்கள் நீங்கும். நகாரத்தை முதலாகக் கொண்டு மூலமந்திரத்தை உச்சரிப்பவர் களுப காளடைவில் பொருளலலாதனவற்றைப் பொருளல்ல என உதறித்தள்ளி சிகார பஞ்சாட்சரத்தை உச்சரிக்கும நிலையை வந்து அடைவார்கள். ஆகவே இறவாத இன்பத்தைக் கொடுக்கும மோட்ச வாழ்வை விரும்புவோர் சிகாதி பஞ்சாட்சாத்தையே உச்சரிக்க வேண்டும். தெள்ளமுதூறச் சிவாய நமவென்று உள்ளமுூறா உரைத்திட்டால் அவன ருள் கைகூடும்.

'எளியவாது
செய்வ ரெங்கள் ஈசனை
ஒளியை யுன்னி
யுருகு மனத்தராய்த்
தெரிய வோதிச்
சிவாய நமவெனுங்
குளிகை யிட்ட
பொன்னுக்குவன் கூட்
[டையே"

என்ற திருமூலநாயனுர் திருமந்திரத்தில் கூறுவதை உற்று நோக்குக.

"சிவ சிவ வென் கிலர்
தீவினையாளர்
சிவ சிவ வென றிடத்
தீவினை மாளுந்
சிவ சிவ வென் றிடத்
தேவரு மாவர்
சிவ சிவ வென் னச்
சிவ கதி தானே"

என்னும் திருமந்திரச்செயயுள் படம்பிடித்துக் காண்பிப்பது போல் பஞ்சாட்சர மகிமையைப்பற்றிக் கூறுகிறது. சைவர்களுடைய மனதை ஈர்க்கிறதும் நினைப்போர்களுக்குப் பக்தியை ஊட்டுகிறதும குனித்த புருவமும கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்புமுடைய நடராஜ வடிவம், மந்திரவடிவமாக அமைந்துள்ளது. மந்திரங்களுக்குள் எல்லாம் தலைசிறந்ததாகிய மகா மந்திரமாகும் பஞ்சாட்சரமே நடராஜ வடிவமாக அமைந்துள்ளது. பஞ்சாட்சா வடிவம பஞ்சகிருத்திய வடிவமாகும். திருநடனம படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் என்னும் பஞ்சகிருத்தியத்தைக் குறிக்கின்றது. [வளரும்]

### இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி

**புகையிரதக்கடவைத் திருத்தங்கள்**

அனுராதபுர — குருணுகல் வீதியிலிருந்து 8 வது மைல் 37½ சங்கிலியடியில் கிளைவிட்டோடும் வீதியிலும், வடபாதையில் அனுராதபுர — தலாவைப் புகையிரதநிலையங்களுக்குமிடையில் 117 மைல் 57 சங்கிலியடியிலுமிருக்கும் புகையிரதக் கடவையானது 1955 ம் ஆண்டு 9ம் மாதம் 27ந் திகதி மாலை 6 மணி தொடக்கம் மறுநாட் காலை (28-9-55) 5 மணி வரைக்கும் திருத்தம் செய்வதற்காக இடையிடையேமூடப்பட்டிருக்கும் போக்குவரத்து வாகனங்கள் இக் கடவையால் செல்ல உதவிசெய்யப்படும் குருணுகலிலிருந்து செல்லும் வாகனங்களுக்குதம்புத்தேமம்-எப்பவெலபாதையும் அனுராதபுரத்திலிருந்துசெல்லும் வாகனங்களுக்கு அனுராதபுர மிகிந்தலேபாதையுமிதற்கு மறுபாதைகள்.

G 34 16-9.55

### கொழும்பு விவேகானந்த சபை

**நாவலர் நினைவுப் போட்டிகள்**

வருடந்தோறும் விவேகானந்த சபையார் நடாத்தும் நாவலர் நினைவுக் கட்டுரைப்போட்டி 6-11-55 இல் கொழும்பு கண்டி யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் நடைபெறும். பேச்சு வன்மைப் போட்டியின் பூர்வாங்க தேர்வுகள் பல்வேறு ஊர்களில் கார்த்திகை (நவம்பர்) மாதத்திலும், இறுதித் தேர்வு கொழும்பில் நாவலர் குருபூசைத் தினத்தையடுத்தும நடைபெறும். பேச்சு வன்மைப் பேட்டியில் அகில இலங்கையிலும் முதலிடம் பெறுபவருக்குத் தங்கப் பதக்கம் பரிசிலாக வழங்கப்படும. விண்ணப்பங்கள் 10-10-55க்கு முன் அனுப்பப்படல் வேண்டும் என்று விவேகானந்த சபைக் காரியதரிசி அறியத்தருகின்றூர்.

உண்மை பேசி

உயர்வு அடைக

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11912

மரிசு யேசுப்பு
கரையூர் யாழ்ப்பாணம்.
வழக்காளி

எதிர்

கஸ்பார் தோமசு —இரண்டாம்
குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.
எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 11912ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி பின்னும் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955ஆ ஐப்பசிமீ 15 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**காணி விபரம்**

யாழ்ப்பாணம் கரையூரில் அரிய தரையன் வளவும் அரியதரையன் தரையும் என்னும் காணி நி. இ 1, 2 185/353 குழியும், வீடுகளும் கல்வீடும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதில் சொரியலாக அரைவாசியும் மேற்குப் பக்கத்திலிருக்கும் வீட்டில் முழுஉருத்தும் வடக்குப் பக்கத்திலிருக்கும் கல்வீடும், தெனகிழக்கிலிருக்கும் வீடும் புறநீங்கலாக.

வ. அ. துரையப்பா
யாழ்ப்பாணம் கொமிஷனர்.
14-9-55.

M 130 14.9 (ரூ 100)

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

**இருவாரப் பலன்கள், 81—9—55 —— 24—9—55**

**மேடராசி அசுவினி, பரணி, 1ம் பாதம். கார்த்திகை முதற்கால்.**

செலவதிகரிக்கும். உம்முடைய பொறுப்புகள் கூடுவதைக் காண்பீர். மனச் சமாதான மிருக்கமாட்டாது. இனத்தவர்கள் சிறிது உதவியாயிருப்பர். புதன், வியாழன் வெள்ளி மிகப் பழுதான நாட்கள்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்த வாரம் தேக சுகம் நல்லாயிருக்கமாட்டாது, நண்பர்உம்மைப் பிழையாக விளங்கக்கூடும். சில சண்டைகளுக்குமிடமுண்டு, வேலை கூடிய பாரமாயிருக்கும். கடைசி இருநாட்களும் உம்மை அதிகம் நிலைகுலைக்கும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

சில கருமங்களில் நீர் இறுதித் தீர்மானஞ் செய்யக்கூடியதாக இந்த வாரமிருக்கின்றது. வருகிற வாரம் தொடக்கம் காலம் அதிகம நல்லாயிருக்கமாட்டாதாகையால் விசேட கருமம் எதவும் வார இறுதிக்கு முன் தீர்மானஞ் செய்ய வேண்டும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் தகுந்த நன்மைதரும் ஒரு கருமத்தை நீர் செய்துமுடிக்கக்கூடியதாயிருக்கும், நண்பர்களுடன் சண்டைகளுண்டாகக்கூடும் ஆனுல் அபாயமான விளைவுகள் உண்டாகமாட்டா. தனலாபமும் உத்தியோக சித்தியும் நிச்சயம்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்த வாரம் நீர் விரைந்து கோபங்கொள்ளுவீர், நண்பர் உமக்கு அதிக கோபமுண்டாக்குவர். பணத்துறையில் நல்லவாரம். ஆனுல் நீர் அதிகம் மிச்சம் பண்ணமுடியாது.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் நீர் அதிகம் புகழ் பெறுவீர். போட்டியிடுவோரை வெல்லுதற்கு மிடமுண்டு பிதா வழி இனத்தவர் உமக்கு சில இடைஞ்சல்களை உண்டாக்கக்கூடும். ஆனுல் நீர் அதிகம் தாக்குப்படமாட்டீர்.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

இந்தவாரம் சுற்றோரில் சில தொந்தரவுகளுக் கிடமுண்டு. நடைமுறை ஒழுங்கில் சில மாற்றங்களுக் கிடமுண்டு சகோதர சகோதரிகள் உமக்கு அதிகம் உதவியாயிருப்பர்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

பணத்துறையில் நல்ல வாரம. சில கடன்களை நீர் நீக்கக்கூடியதாயோ, அல்லது இழந்ததாகக் கைவிடப்பட்ட சில பொருள்களை நீர் திருப்பிப் பெறக்கூடியதாயோ இருக்கும். ஆனுல் வேலை அதிகமாயிருக்கும். மனச் சமாதானமு மிருக்க மாட்டாது.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

இந்தவாரம் நீர் சமாளிக்க முடியாதபடி முழுதாய் எல்லை கடந்து கருமங்கள் செல்லக்கூடும். இனத்தவர்கள் உம்மை அதிகம் வருத்தக்கூடும். புது முயற்சிகள் கூடுதலான செலவுகளைக் கொண்டு வரும் ஆனுல் எதிரில் நல்லகாலம் வருகின்றது. ஆசையால் நீர் துன்பப்பட வேண்டாம்.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் சுகவீனங்களுக் கிடமுண்டு. நீர் இடைஞ்சல்களை வெல்லமுடியாமவிருக்கும். நண்பருடன் பிழை எண்ணங்களுக்கு மிடமுண்டு. பணத்துறையில் நல்ல வாரம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

வாரத்தின் முதல்நாள் உம்மைச் சிறிது நிலைகுலைக்கும். செலவதிகரிக்கும். ஆனுல் அவற்றைச் சமாளிக்கவேண்டிய பணம் பெறுவீர். இனத்தவர்கள் சிறிது கோபமுண்டாக்கக்கூடும். குடும்பக் காரியங்களும் அதிகம் நலலாயிருக்கமாட்டா. ஆனுல் நல்ல காலம் முன்னுக்கு வருகின்றது.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

உத்தியோகத்துக்கு நல்லவாரம் ஆனுல் உமக்கு மனச்சமாதானமிருக்கமாட்டாது. குடும்பக் குழப்பங்கள் ... இனத்தவர்களால் சில குழப்பங்களை உண்டாக்கக்கூடும்.

யாழ்ப்பாணம்

## நாகலிங்க சங்கீத நிலையம்

### விழா நிர்வாக சபைக் கூட்டம்

22-8-55 திங்கள் காலை 10½ மணிக்கு திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணக் கச்சேரிக் கந்தோர் மண்டபத்தில் மேற்படி நிர்வாகசபை அங்குரார்ப்பணக்கூட்டம் ஆரம்பமானது.

சென்ற 20 வருடமாக நடைபெறும் இந்தச்சங்கீதநிலையம நாட்டுக்குச் செய்த நற்பணியைப்பற்றியும் இதிலிருந்து கற்றுத்தேறிய அநேகர் இன்று நாட்டின் பல பாகங்களிலும் அநேக உயர்தரக் கல்லூரிகளிலும் இசை ஆசிரியர்களாக நிகழ்கின்ற சிறப்பையும் பற்றிப் பேசிய முகாந்திரம E. P. இராசையா அவர்கள் இந்நிலைய வித்துவான், கர்நாடக சங்கீத கலாநிதி புத்துவாட்டி S. N. சோமசுந்தரம் அவர்கள் நம்நாட்டிலே ஐம்பது வருடமாகவும் இந்த நிலையத்திலே இருபது வருடமாகவும் ஆர்வத்தோடும் உணர்ச்சியுடனும செய்துவரும் சிறந்த சங்கீதக் கலைச் சேவையைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும்பேசும்போது தென்னிந்திய வித்துவான்களின் சிறந்த பாராட்டைப் பெற்ற மகாவித்துவான் இந்த நிலையத்தை நடத்துவதில் போதிய பொருளுதவியின்றி இடர்ப்படுவதனுல் இந்த நிலையத்தை நாம் பொதுமக்களாக ஆதரித்து வேண்டிய முயற்சி எடுக்கவேண்டுமென்றும் இதனை நிறைவேற்ற ஒரு நிர்வாக சபை அமைக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினுர்.

இதன் பின் வருவோர் இந்நிர்வாக சபையின் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டனர். தலைவர் திரு. ம. ஸ்ரீகாந்தா C.C.S., O. B. E. அவர்கள் வடமாகாண அதிபர், உபதலைவர் திரு. P. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் யாழ்ப்பாண பெரியகோட்டு நீதிபதி, இணைக்காரியதரிசிகள் திரு. A. பெருமையினுர் அவர்கள் யாழ்ப்பாணக் காரியாதிகாரி, முகாந்திரம் E. P. இராசையா அவர்கள், தனதிகாரி திரு. K. P. முத்தையா அவர்கள் "சமூகத் தொண்டன்" ஆசிரியர்.

இதன்பின் 24-9-55 ல் சங்கீத கலா வல்லபன் சோமசுந்தரம் அவர்களது சிஷ்யர்களுள்ளிட்ட பல சங்கீத வித்துவான்கள், கலைஞர்களது கதம்ப நிகழ்ச்சி ஒன்று யாழ் நகர மண்டபத்தில் நிகழ்த்த வேண்டுமென்றும் இதனை ஒழுங்கு செய்து நிறைவேற்ற உத்தியோகத்தர்கள் ஐந்து பேருடன் திருவாளர்கள்: P. M. வேதநாயகம், E. ஆனந்தநாயகம் உள்ளிட்ட எழுவர் கொண்ட ஓர் உபசபை அமைக்கவேண்டுமென்றும் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று. தலைவர்களின் நிறைவுரையுடன் கூட்டம் நிறைவேறிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு 207 K. K. S. ரோடு சோம. மு. இராமநாதன் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் கீழ் விபரிக்கப்படும் நகைகளை (29-9-55) மன்மதஹூ புரட்டாதி மீ 13 உ வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| நம்பர் | ஹூமீஉ | ரூபா | ஊர் பெயர் நகைவிபரம் |
|---|---|---|---|
| | 1954 | | |
| 2548 | ஜனவரி 29 | 80 | கந்தர்மடம் அம்மன்கோவிலடி தம்பிராசா ரெட்ணராசா வெ கல் நீலக்கல் மாலைப் பதக்கம் 1 |
| 3117 | மார்ச்சு 6 | 35 | கஸ்தூரியார்ரோடு 177 இராமலிங்கம் நாகராசா தாலி 1 |
| 3264 | ,, 24 | 120 | கோப்பாய் வடக்கு கார்த்திகேசு இரத்தினம் ரெளி அன் வளையல் சோடி 2 |
| 3326 | ,, 31 | 100 | சிறுப்பிட்டி ஆறுமுகம் கபில சபிள்ளை பழுது குண்டு சங்கிலி 1 |
| 3332 | ஏப்ரில் 1 | 20 | திருநெல்வேலி K. S. பத்மநாதன் பழுது அச்சரக்கூடு 1 |
| 3481 | ,, 10 | 175 | கொட்டடி க. சி. ஆறுமுகம். கல் முகப்புடன் கெட்டிக்காப்பு சோடி 1 |
| 3635 | ,, 19 | 17 | தல்லாலை K. P. சோமபாலா கிளாவர் மோதிரம் 1 |
| 3693 | ,, 21 | 50 | K. K. S. ரோட் 220 நாகலிங்கம் நடராசா நீலக்கல் நெ. புரூச் 1 ஒரு கல் இல்லாத எஸ் மோதிரம் 1 |
| 3922 | மே 4 | 10 | அல்வாய் மேற்கு கதிராமு காங்கேசு வெ கல் கிளாவர் குச்சு சோடி 1 |
| 3958 | ,, 6 | 15 | மூளாய் ஆஸ்பத்திரியடி வேலுப்பிள்ளை இராசா வெ கல் தோடு சோடி 1 |
| 3991 | ,, 8 | 25 | நாவாந்துறை தெற்கு அ. செல்வநாயகம் பிள்ளைக்காப்பு சோடி 1 |
| 4106 | ,, 17 | 25 | தெல்லிப்பளை ஆறுமுகம் இராசனுயகம் S. K. விலாச மோதிரம் 1 |
| 4249 | ,, 26 | 15 | நாச்சிமார்கோவிலடி லெட்சுமணன் இராசு வெ கல் கடுக்கன் சோடி 1 |
| 4660 | ஜூன் 16 | 50 | நாவலர் ரோடு 174 க. சேனாதிராசா சிகப்பு கல் பிம்பி பதக்கம் 1 |
| 4695 | ,, 18 | 12 | கொட்டடி 33 செல்லப்ப செட்டியார் சண்முகநாதன் பிள்ளைக் காப்பு 1 |
| 4748 | ,, 21 | 40 | செம்மாதெரு 36 K. அமிர்தலிங்கம் சிகப்புகல் நெ புரூச் 1 |
| 4791 | ,, 23 | 360 | காரவெட்டி மேற்கு ஆறுமுகம் கந்தசாமி பிறவுண் கல் பெண்டனுடன் வெர்தய சங்கிலி 1 அல்பேட்சங்கிலி 1 |
| 4798 | ,, 24 | 30 | ஆனைக்கோட்டை சரவணமுத்து கந்தையா இனுமல் மோதிரம் 1 தொங்கட்டான் சோடி 1 |
| 4892 | ,, 28 | 30 | K. K. S. ரோடு 501/1 சிதம்பரம் கறுப்பையா தாலி 1 |
| 5024 | ஜூலை 7 | 35 | சீர்வேலி தெற்கு நாகலிங்கம் சரவணமுத்து சில் மோதிரம் 1 |
| 5139 | ,, 14 | 15 | கொட்டடி சின்னத்தம்பி நாகராசா மூன்று கல் மோதிரம் 1 |
| 5242 | ,, 20 | 15 | சுதுமலை தெற்கு சாவல்க்கட்டு சினி தங்கராசா மூன்று கல் மோதிரம் 1 சிற ஆடித்தன் மோதிரம் 1 |
| 5296 | ,, 22 | 25 | கொட்டடி 46ம் சின்னத்தம்பி நாகராசா ரேடியோ வளையல் 1 |
| 5384 | ,, 26 | 25 | நல்லூர் தம்பிஐயா சம்மந்தர் பிள்ளைக் காப்பு சோடி 1 |
| 5422 | ,, 28 | 10 | ஆனைக்கோட்டை வயித்திலிங்கம் இராசையா வெ கல் கிளாவர் குச்சு சோடி 1 |

(29-9-55) மன்மதஹூ புரட்டாசி மீ 13 உ வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மேல் எடுபட்ட நகை புறநீங்கலாக மீதி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

S. PASUPATHY CHETTIAR,
Auctioneer

7-9-55. [M 128 9, 16-9-55]

# அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு க. செ. த. செ. கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் கீழ் விபரிக்கப்படும் நகைகளை அக்டோபர் மாதம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் என்னால் மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| No | 1952 | ரூ | ஊர் பெயர் நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| 761 | ஜூன் 18 | 30 | செட்டித்தெரு No. 39. S சங்கரலிங்கம் கல் மோதிரம் 1 |
| 1187 | ஜூலை 24 | 30 | No 9 நாவாந்துறைரோட் செபஸ்தியான் பெலிக்கான் சுரைகல் இல்லாத சிகப்புக்கல் தோடு சோடி 1 |
| | 1953 | | |
| 3476 | ஜனவரி 8 | 300 | மானிப்பாய் வடக்கு K. தருமலிங்கம் வெ. கல். புரூ தாலி 1 செடி 2 உடன் மூறுச்சக்குத்தி கொடி 1 |
| 3940 | பிப்ரவரி 6 | 22 | No 7 கைலாசப்பிள்ளையார்கோவிலடி இ வேலுப்பிள்ளை தாலி 1 தடை 2 |
| 655 | மே 14 | 220 | சுண்ணாகம் சின்னக்குட்டி பொன்னம்பலம் சிலகல் 1 தொங்கட்டானில்லாத வெ கல் பெண்டனுடன் அல்பட் சங்கிலி 1 வளையல் சோடி 2 |
| 749 | ,, 20 | 220 | மாதகல் வயித்திலிங்கம் சேதுராசா சுரை இல்லாத மிளகு மொட்டுக் காப்பு சோடி 1 டைமன் அட்டியல் 1 |
| 936 | ஜூன் 3 | 225 | K. K. S. ரோட் 630 க. கிருஷ்ணபிள்ளை பிரவுண் கல் பெண்டனுடன் வெந்தய சங்கிலி 1 கைச்சங்கிலி சோடி 1 முருக்குக்காப்பு 1 வெ கல் மோதிரம் 2 வெள்ளி ஊசியுடன் வெ கல் புரூச் 1 |
| 1179 | ,, 19 | 15 | 5/2 சிவியாதெரு மேற்கு வயிரவி கந்தையா தாலி 1 |
| 1274 | ,, 24 | 120 | மண்டதீவு அருணாசலம் சிவசம்பு மொட்டுக்காப்பு சோடி 1 |
| 1711 | ஜூலை 25 | 15 | கோண்டாவில் மேற்கு செல்லையா கனகரெட்டினம் பழுது மோதிரம் 1 |
| 1838 | ஆகஸ்ற் 4 | 90 | ஐய்தருஸ் மகாம்லேன் 15 M. C. A. லத்திரிப், சந்திரகாரமாலை 1 |
| 1893 | ,, 8 | 80 | K. K. S. ரோட் 408 K. தியாகராசா கல் முத்து பெண்டன் 1 |
| 2236 | ,, 26 | 600 | அத்தியடி S நடராசா வயிரம் முத்துக்கட்டிய பதக்கம் 1 உடன் நிசலஸ் 1 |
| 3893 | டிசம்பர் 7 | 7 | கண்டி ரோட் M. மகேஸ்வரி சிறுகிளாவர் மோதிரம் 1 |
| 4000 | ,, 14 | 130 | திண்ணவேலி ராம. ஐயன் தொ இல்லாத இதாலி 1 உடன் டைமன் குண்டு சங்கிலி 1 |
| 4213 | ,, 28 | 105 | மண்டதீவு அருணாசலம் சிவசண்முகம் கு. ½, பவுண் 1 உடன் அல்பட்சங்கிலி 1 |
| | 1954 | | |
| 4549 | ஜனவரி 19 | 10 | நாவலர்வீதி K. துரைராசா தொ இல்லாத பிரவுண் கல் பெண்டன் 1 |
| 4614 | ,, 23 | 102 | கலட்டி சூரன் சின்னத்தம்பி அச்சுக் காப்பு சோடி 1 வெள்ளி ஊசியுடன் வெ கல் புரூச் 1 |
| 4879 | பிப்ரவரி 13 | 110 | உடுவில் முத்துக்குமாரு விநாயகமூர்த்தி செடி வேலை செய்த அரை டலர் 1 |
| 4926 | ,, 16 | 50 | திருனவேலி த. தேவராசா கல்மோதிரம் 1 முறுக்குக் காப்பு சோடி 1 |
| 5036 | ,, 26 | 35 | கண்டிரோட் நொத்தார்ஸ் லேன் மா. மகேஸ்வரி வெ கல் காதுக்குச்சி 2 சுத்தா மோதிரம் 2 |
| 5391 | மார்ச 24 | 40 | கொக்குவில் மேற்கு க. செல்வநாயகம் சி கல் தோடு சோடி 1 |

S. PASUPATHY CHETTIAR,
Auctioneer.

வண்ணார்பண்ணை
5-9-1955. [M. 127, 9, 16—9—55.]

# கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
சட்டுடை மானிப்பாய் சபாபதி
எட்வின் பொன்னப்பா
— வழக்காளி

இல 10458
விரோதமாக

மானிப்பாய்
1 ஆறுமுகம் குமாரசாமியும்
2 பெண் நாகம்மாவும்
3 சபாபதிப்பிள்ளை ஆனந்த நடராசாவும்
4 பெண் புஷ்பமணியும்
— எதிரிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கமிஷன் சட்டளைப்பிரகாரம் இதன் கீழ்க் காணப்படும் காணிகள் 1955 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் முறையே குறித்த காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

## தீர்வைத் தொகை

முதலும்வட்டியும் ரூபா 2336-66ம் இன்னும் ரூபா 2000 க்கு 27-10-53 தொடக்கம் 20-1-54 வரையும் ஹூ 1க்கு 100 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் மொத்தத் தொகைக்கு இறுக்குந் திகதி வரையும் ஹூ 1 க்கு 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 217-70-ம் இதில் கோட்டுச் செலவால் இறுத்த ரூபா 150 ம் ரூபா 6-ம் கழித்து

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலி மேற்கு மானிப்பாய்க் கோபிற்பற்று மானிப்பாயிறை எழுமூள்ளி தியாகர் தோட்டம் அல்லது தியாதோடை கில பா. 4ம் குளி 11 ம் கல்வீடும் பயிர்வகைகளும், கிழக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றிற் பங்கும் ஊர்வை வழிவாய்க்கால் பங்கும் எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை தம்பித்துரைக்கும் பெண் சிவக்கொழுந்துவுக்குமுரிய ஆதனம், வடக்கு அம்பலம் கனகசபையின் ஆதனம், மேற்கும் தெற்கும் ஒழுங்கை இடங்கலு மிதைச் சேர்ந்தவைகளும். இக்காணி 280/191-ல் பதியப்பட்டது.

2 மேற்படி இறை எழுமூள்ளியும், தியாகர் தோட்டமும் கில. பா. 9ம் குளி 12-ம் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி சபாபதியினுரிமைக்காரருக்குரிய ஆதனமும், தியாகராசா கைம்பெண் ஆச்சிக்குட்டியினுதனமும், வடக்கு அம்பலம் கனகசபைக்குரிய ஆதனமும், ஊர்வை நிலமும், இக் காணிக்கு வரும் ஒழுங்கையும், மேற்கு தம்பிப்பிள்ளை தம்பித்துரைக்கும் பெண் சிவக்கொழுந்தவுக்குமுரிய ஆதனமும், ஊர்வை நிலமும் கிணற்றுப் பாவிப்புக்கு விடப்பட்ட ஒழுங்கையும், இக்காணிக்கு வரும் ஒழுங்கை முகப்பும் கந்தையா பெண் மீனம்பாவின் ஆதனமும், தெற்கு ஊர்வை நிலமும் செல்லப்பா வயிரமுத்துவின் ஆதனமும், இதடங்கலும், மேற்கெல்லையாகவிருக்கும் ஊர்வை நிலத்திலும் அதிலிருக்கும் கிணற்றிற் பங்கிலும் இக் காணிக்கும் கிணற்றுக்கும், மேற்கேயிருக்கும் ரோட்டிலிருந்து வரும் ஒழுங்கையிலும் பாதையிலும், கிணற்றுக்குப் போகும் பாதையில் நிற்கும் பலா ஒன்றிலும், இக்காணிக்குப் போகும் ஒழுங்கையில் நிற்கும் தென்னை ஒன்றிலும், இக்காணிக்குரிய பங்குரித்துகளும். இக்காணி 267/12 ல் பதிவு செய்யப்பட்டது.

பெ. முத்துத்தம்பி
வெர்தீஸ் கமிஷனர்

சுதுமலை தெற்கு
மானிப்பாய்
1955ஆ செப்டெம்பர் மீ 12 உ
M 129 16-9-55. (ரூ 100)


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49. S. கனகசபை
சிறுப்பர்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, o their Press, the Saiva Prakasa Press, Vannarpannai, Jaffna on Friday September. 16 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org